தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
மோட்டார் வாகன விபத்து கோருரிமைத் தீர்ப்பாயம், கடலூர்
M.C.O.P. No. 1841 of 2013
மனுதாரர் தரப்பு **1** -வது சாட்சியின் வாக்குமூலம்

பெயர் : குகன்

தந்தை/ கணவர் பெயர் : அமிர்தலிங்கம்

சட்டம் 49/1969ன் விதிமுறைகளின்படி **08.01.2025** நாளாகிய இன்று திரு. **P.**நாகராஜன் **M.A., M.L.,** மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய நீதிபதி, கடலூர், அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை: **(எதிர்மனுதாரர் தரப்பில்)**

எனது மகன் விபத்து சமயத்தில் இரண்டாம் வகுப்பு படித்தவன், தற்போது அவன் 12ம் வகுப்பு படிக்கிறேன். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் என்னோடுதான் என் மகன் வந்தான். விபத்தானது சாலையை குறுக்காக கடக்கும்போது நடந்ததா என்றால் ஓரம் ஒதுங்கும்போது நடந்தது. எனது மகனுக்கு எந்த இடத்தில அடிபட்டது என்றால் இடது முழங்கையில் அடிப்பட்டது. எந்த மருத்துவமனையில் சேர்த்தேன் என்றால் கடலூர் வள்ளிவிலாஸ் மருத்துவமனையில் சேர்த்தேன். அந்த மருத்துவமனையில் முழங்கை காயத்திற்கு அறுவை சிசிச்சை செய்து K வயர் பொருத்தினார்கள் என்றால் ஆமாம். எனது மகன் அடிப்பட்டு மருத்துவமனையில் சேர்ந்து ஐந்து நாட்கள் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை முடிந்து வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள் என்றால் தொடர் சிகிச்சைக்கு வர சொல்லி 60 நாட்கள் கழித்து வயர் எடுத்தார்கள். தற்போது அவனுக்கு ஒன்றும் இல்லை என்றால் கை வலிக்கிறது என்று சொல்கிறான். அதன்பிறகு சிகிச்சை எடுத்துக்கொண்டதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அறுவை சிகிச்சை செய்யபட்ட பின்னர் எனது மகனுக்கு எல்லாம் சரியாகிவிட்டது என்றால் சரியல்ல. வாகனத்தை ஓட்டி வந்த நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் நான் எனது மகனை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டேன் தெரியாது. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் தெரியாது. 17.09.2018-ல் தள்ளுபடியான மனு 04.10.2024ல் கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது என்றும் அதற்கு இடைப்பட்ட காலத்திற்கு வட்டி ஏதும் கிடைக்காது என்று சொன்னனால் சரிதான். ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டியுள்ளதால் இரண்டாம் எதிர்மனுதாரர் நஷ்டயீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல.